DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.III, TRICHIRAPPALLI.

C.C.1/18

Deposition of witness for Prosecution PW. 9

Name : கஸ்தூரி

Father /Wife of :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 12.04.2018

மு.வி.

நான் தற்போது கரூர் மாவட்டம் , கா.பரமத்தி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 5/07/17ம் தேதி காலை சுமார் 8.00 மணியளவில் பெட்டவாய் தலை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது பெட்டவாய்தலை உதவி ஆய்வாளர் திருமதி கீதா அவர்கள் கொடுத்த தனி அறிக்கையை பெற்று நி.கு.எண். 149/17 ச/பி 294(பி), 332, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 4. பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

WEB COPY

கு.வி.

சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு 10 நிமிடங்களில் வந்து விடலாம். இரவு 8.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதற்கு காலை 8.00 மணிக்குதான் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். புகாருக்கான தாமதத்திற்கு காரணம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 14ல் புகார்தாரரிடம் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். எதிரியின் மீது குண்டார் சட்டத்தில் போட வேண்டும் என்பதற்காக சம்பவமே நடக்காத போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை

Taken over by me in open court read over of the witness and admitted by the witness to be correct

Judicial Magistrate No. III
Tiruchirappalli.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.III, TRICHIRAPPALLI.
C.C.1/18

Deposition of witness for Prosecution PW. 10
Name : சந்திரசேகரன்
Father /Wife of :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 12.04.2018

மு.வி.

நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 5/07/17ம் தேதி காலை சுமார் 8.00 மணியளவில் பெட்டவாய்தலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து போது திருமதி கீதா அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் திரு. கஸ்தூரி என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது மேல் பார்வைக்கு வைத்திருந்ததை மேல் நடவடிக்கைக்காக நான் எடுத்து கொண்டு 05/07/2017 ம் தேதி காலை 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாதிக், யாசிர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.த.சா.ஆ. 5 தயார் செய்தேன். பின்னர் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றிய டிஎன் 45 ஆர் 7540 என்ற மோட்டார் சைக்கிள் மற்றும் கருப்பு கலர் பிளாஸ்டிக் கைப்பிடி 4 செமீ, மற்றும் இரும்பு பாகம் 5 செமீ அளவுள்ள கத்தியை கைப்பற்றல் மகசரில் கைப்பற்றினேன். கைப்பற்றல் மகசர் அ.த.சா.ஆ. 6 பின்னர் வழக்கு சொத்தை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். படிவம் 95 அ.த.சா.ஆ. 6 . டிஎன் 45 ஆர் 7540 என்ற மோட்டார் சைக்கிள் சா.பொ. 1 கத்தி. சா.பொ.2 பின்னர் சாட்சிகள் 1 முதல் 10 வரையானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்றொரு வழக்கில் இருந்த எதிரியை 23.08.2017ம் தேதி இந்நீதிமன்றத்தில் சம்பிரதாய கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் இருந்தவரை 24/08/2017 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்தேன். பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது 294(பி), 332, 506(2) மீது 25/10/2017 அன்று குற்றபத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

.கு.வி.

அசா.1 அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் மருத்துவர் நடந்த சம்பவத்தை முழுமையாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர் மருத்துவசிகிச்சை அளித்தற்காக எந்த சான்றிதழும் கொடுக்கவில்லை. அ.சா.1,2,3 அன்று பணியில் இருந்தார்கள் என்பதற்கான எந்தவித ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தாமதமாக புகார் கொடுத்தற்காக காரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்தவித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் எந்தவித சான்று பொருளும் எடுத்து கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் எதிரியை குண்டார் சட்டத்தில் போடுவதற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. வழக்கின் வாக்குமூலம் , சான்றாவணங்கள், சான்று பொருள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தவறுதலாக எதிரியின் மீது இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை

Taken over by me in open court read over
of the witness and admitted by the witness
to be correct

Judicial Magistrate No. III
Tiruchirappalli.

WEB COPY